**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 03/2009**

Prosecution witness : **53**

| | | | |
|---|---|---|---|
| Name: | அருணாச்சலம் | Caste: | |
| Father'sName : | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A4,A7, A9 present. A6 already died. Others absent. Petition U/s 317 crpc filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 12.04.2023

**முதல் விசாரணை**:

நான் நீதித்துறையில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து ஓய்வு பெற்று தாழையூத்தில் குடியிருந்து வருகிறேன். நான் 2007 ம் ஆண்டு தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் பணிபுரிந்தபோது தலைமை எழுத்தருக்கு உதவியாக சொத்துக்களை பெற்று பாதுகாப்பு அறையில் வைக்கும் பிரிவில் அவருக்கு உதவியாக இருந்தேன். பொதுவாக சொத்துக்கள் வரப்பெற்றால் அதை பாதுகாப்பு அறையில் வைப்போம். காவல் துறையினர் வேண்டுகோள் எதுவும் கொடுத்தால் அந்த சொத்துக்களை இரசாயன பரிசோதனைக்கு அனுப்புவதற்கு நடுவர் பார்வைக்கு வைத்து

அவரது உத்தரவிற்கு பின்னர் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைப்போம். அதன் படி தென்காசி காவல் நிலைய குற்ற எண் 460/2007 வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம்-95ன் படி சோதனை செய்து நீதிமன்ற சொத்து எண் பதிவேட்டில் 555/2007 மற்றும் 567/2007, 593/2007 என பெற்று பாதுகாப்பு அறையில் வைத்தேன். சேரன்மாதேவி காவல் துணை கண்காணிப்பாளர் சொத்துக்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி அறிக்கை பெற்று தரும்படி 14.09.2007 ம் தேதி கொடுத்த வேண்டுகோள் கடிதம்தவறுகள் திருத்தப்பட்டு 10.10.2007 அன்று நீதித்துறை நடுவரிடம் உத்தரவு பெற்று இரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் அ.சா.ஆ. 10 ஆகும். நீதித்துறை நடுவர் பிறப்பித்த உத்தரவின் படி தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் அ.சா.ஆ. 11 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

-